# நற்றமிழ்க்குடில்

## மாணவ இலக்கிய இதழ்

குடில் : 2 செப்டம்பர் 2019 விருந்து : 2



சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

# நற்றமிழ்க்குடில்

**செப்டம்பர் 2019**


| | | |
|---|---|---|
| ஆசிரியர் குழு | : | மு. சத்யா<br>முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு<br><br>அ. ஸ்டெல்லா மேரி<br>அ. பர்ஸானா<br>ஆ. வள்ளி<br>இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு<br><br>அ. உமா மகேஸ்வரி<br>சா. யோகேஸ்வரி<br>இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு |
| ஆலோசனைக் குழு | : | டாக்டர் சேது குமணன்<br>கல்லூரித் தலைவர்<br><br>முனைவர் ம.சம்ஷாத்<br>கல்லூரி முதல்வர்<br><br>பேராசிரியர் சே.கண்மணி<br>தமிழ்த்துறைத் தலைவர்<br><br>தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் |
| வெளியீடு | : | சோகா தமிழ்ப்பேரவை<br>சோகா இகெதா கலை மற்றும் அறிவியல்<br>மகளிர் கல்லூரி, சென்னை - 600 099. |
| விலை | : | ரூ.10/- |
| அச்சு | : | “ஸ்பெஷல் எபெக்ட்ஸ்”<br>மறுதோன்றி அச்சகம், அம்பத்தூர்<br>பேசி : 9282142789 |

## உள்ளே........


தலையங்கம்

தோழிக்குக் கடிதம்

நூல் அறிவோம்

மரபுக் கவிதை

பழங்கதை கேளு

விடுகதை

மலரே...

கட்டுரை

சிறுகதை

கவிதை

தூரிகைத் தூரல்கள்

கல்லூரி நிகழ்வுகள்


# நற்றமிழ்க்குடில்

மாணவ இலக்கிய இதழ்


குடில் : 2    விருந்து : 2

சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

செப்டம்பர் 2019

தலையங்கம்



# நமது சென்னை

வந்தாரை வாழ வைக்கும் தமிழகத்தின் தலைப் பகுதியாம் சென்னை உருவானது ஒரு சுவையான வரலாறு. பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு 1639-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22-ஆம் நாள் கிழக்கிந்தியக் கம்பெனி செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அமைந்துள்ள சிறிய நிலப்பகுதியை வேங்கடபதி நாயக்கரிடமிருந்து விலைக்கு வாங்கியது. அவருடைய தந்தை சென்ன நாயக்கரின் பெயரால் சென்னைப் பட்டினம் என்று அழைக்கப்பட்டது. இந்தக் கோட்டையைச் சுற்றி குடியிருப்புகள் உருவாகி அதன் அருகே இருந்த கிராமப் பகுதிகள் இணைக்கப்பட்டு சென்னை மாநகரம் உருவானது. முன்பு மதராச பட்டிணம் என்று அழைக்கப்பட்டச் சென்னை தற்போது உலகின் பிரபலமான நகரங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

“ஆயிரம் குளங்கள் கொண்ட நகரம்” என்ற பெருமை சென்னைக்கு மட்டுமே உண்டு என்பது பலருக்குத் தெரியாத ஒன்று. வடக்கில் கொற்றலை ஆறு, மத்தியில் கூவம் ஆறு, தெற்கில் அடையாறு. இம்மூன்று ஆறுகளும் சென்னை நகரை மூன்றாகப் பிரிக்கின்றது. பல ஆண்டுகளுக்கு முன்பு கூவம் ஆற்றில் எண்பது வகையான மீன்கள் இருந்தன என்றும் தற்போது ஒருவகை மீன் கூட உயிர் வாழ முடியாத நிலைக்குக் கூவம் ஆறு வந்துவிட்டது. சென்னை என்றதும் எல்.ஐ.சி. கட்டிடம், சென்ட்ரல் இரயில் நிலையம் போல உடனே நம் நினைவுக்கு வருவது கூவம் ஆறு.

மதராச மக்களின் குடிநீர் பஞ்சத்தைப் போக்க சுமார் 217 ஆண்டுகளுக்கு முன் மனிதனால் வெட்டப்பட்டது பக்கிங்ஹாம் கால்வாய் ஆகும். தற்போது சென்னை வாசிகளின் தாகத்தைத் தணிக்கச் சோழவரம், பூண்டி போன்ற ஏரிகளின் தண்ணீர்

பயன்படுகிறது. அக்காலத்தில் சென்னையில் தண்ணீர் பற்றாக் குறையினால் மயிலை திருவல்லிக்கேணி பகுதிக்கு வில்லிவாக்கத்திலிருந்து குடிநீர் கொண்டு வந்து விற்றார்கள் என்ற செய்தி உள்ளது.

அப்போது ஒரு குடம் நீருக்கு ஒரு அணா விலை இருந்தது. இப்போது ஒரு பாட்டில் தண்ணீரின் விலை பத்து ரூபாய் வரை உயர்ந்து விட்டது.

உலகத் திருமறையான திருக்குறளை அளித்த திருவள்ளுவர் வாழ்ந்த இடமும் மயிலை ஆகும்.

"ரிப்பன் எங்கள் அப்பன் மவுண்ட் பேட்டன் எங்கள் பாட்டன்" என்று யார் நன்மை செய்தாலும் பாகுபாடின்றி ஒத்துழைப்பையும் அன்பையும் ஆதரவையும் தருபவர்கள் எம் சென்னை வாசிகளே ஆவார்கள்.

"அனுபவி ராஜா அனுபவி" என்ற திரைப்படத்தில் கவியரசு கண்ணதாசன் "மெட்ராஸ் நல்ல மெட்ராஸ்" என்ற பாடல் வரிகளின் மூலம் அன்றைய சென்னை பட்டினத்தையும், இன்றைய சென்னை மாநகரையும் நம் கண் முன்னே கொண்டு வருகிறார். அதுமட்டுமின்றி மதராசப்பட்டிணம் என்ற திரைப்படமும் பழைய சென்னையை நம் கண் முன்னே படம் பிடித்துக் காட்டியுள்ளது.

வந்தாரை வாழ வைக்கும் சென்னை தற்போது சிங்காரச் சென்னையாகச் சிறப்புற்று விளங்குகிறது.

"வியர்வை தொழிலாளர்களின் வேடந்தாங்கல்"
"பன்மொழி பேசுபவர்களின் பல்கலைச்சாலை"
சென்னை என்று கூறினால் அது மிகையில்லை.

*பெ. சாந்தி*
இளங்கலைத் தமிழ்
மூன்றாமாண்டு

# தோழிக்குக் கடிதம்...



அன்புள்ள வினித்தா

உன் தோழி ரஞ்சிதா எழுதுவது. நீ நலமாக உள்ளாய் என்று நம்புகிறேன். சிறு வயதில் இருந்தே நாம் இருவரும் நண்பர்களாக இருக்கிறோம். முதலாம் வகுப்பிலிருந்து பன்னிரெண்டாம் வகுப்பு வரையிலும் இருவரும் ஒன்றாகப் படித்து வளர்ந்தோம். பள்ளிப் படிப்பு முடித்த பின் கல்லூரி வாழ்க்கையையும் ஒன்றாகவே கழித்தோம்.

இன்று இருவரும் மூன்று வருடக் கல்லூரி வாழ்க்கையை முடித்துவிட்டோம். நான் ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் வேலை செய்கிறேன். நீயோ வேலைக்குச் செல்லாமல் வீட்டிலேயே உள்ளாய். உனது பெற்றோர் இன்றைய சமுதாயத்தில் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை நினைத்துப் பயந்து அனுப்ப மறுக்கின்றனர். இதை நினைக்கும் போது எனக்குப் பிடித்த பாரதியின் படைப்புகளே நினைவுக்கு வருகின்றன. அதிலும் எனக்குப் பிடித்து என் மனதைத் தொட்ட "புதுமை பெண்" என்ற கவிதை தான். இதை நாம் நமது பள்ளிப் பருவத்தில் படித்துள்ளோம். அன்று சிறு வயதில் என் மனதில் ஆழமாகப் பதிந்த பாடல் இது.

புதுமைப் பெண் கவிதையை நினைக்கும் போது இன்றைய சமுதாயத்தில் பெண்களுக்கு நடைபெறும் கொடுமைகளைப் பற்றி உன்னுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

நம் பெற்றோரின் காலகட்டத்தில் பெண்கள் அடிமைகளாகவும் பேச்சுரிமை, கல்வி கற்கும் உரிமை அற்றவர்களாகவும் தான் இருந்தார்கள். ஆனால் இன்று அந்த நிலை மாறி பாரதியார் கூறியபடி,

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்"

என்ற வரிகளுக்கு ஒப்ப ஜனநாயக ரீதியிலான உரிமை, எழுச்சிகள், சுதந்திரம் எனப் பெண்கள் முன்னேறி ஆண்களுக்கு நிகராகச் சக துறைகளிலும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு இந்த நாடு ஒரு வகையில் முன்னேறிக் கொண்டே சென்றாலும் முழுமையாக அனைத்துப் பெண்களுக்கும் இந்த வாய்ப்புக் கிடைப்பதில்லை. 50 சதவீதமானவர்களுக்கு அத்து மீறல்கள் நடக்கின்றன.

"ஓடி விளையாடு பாப்பா நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா"

என்று பாரதி கூறிவிட்டுச் சென்றார். ஆனால் இன்றோ ஓடிவிளையாடும் பிஞ்சுக் குழந்தைகளையும் இந்த நஞ்சுச் சமூகம் விட்டு வைப்பதில்லை என்பதே உண்மை. 6 மாதக் குழந்தை முதல் 60 வயது முதியவர் வரை இந்தச் சமூகத்தில் பெண்களுக்கு அநீதியே ஏற்படுகின்றது.

பெண் எவ்வளவுதான் உழைத்து முன்னேறினாலும் குடும்பத்திலும், சமூகத்திலும், சமுதாயத்தில் அவளுக்கு மறைமுகமாக பல பிரச்சினைகள் எழுகின்றன. அவ்வளவு ஏன்? நான் பணிபுரியும் என் நிறுவனத்திலும் பல பெண்களுக்குப் பாலியல் ரீதியான துன்பங்கள் நடந்து வருகின்றன.

பாரதி கூறிய பாடல் அடிகள் உனக்கு நினைவு இருக்கிறதா?

"நிமிர்ந்த நன்னடை, நேர்க்கொண்ட பார்வை" அன்று அவர் கூறிய பெண்கள் இன்று இருந்தாலும் ஒரு சில ஆண் மிருகங்களால் படிக்கின்ற, பணிபுரிகின்ற பெண்களுக்கு எதிரான வன்முறைகள் உலகளவில் அதிகரித்த வண்ணமே உள்ளது.

அன்று பெண் சுதந்திரத்துக்காகக் குரல் கொடுக்க பாரதி இருந்தார். இன்று பெண்களுக்கு நடைபெறும் குறைகளை

எடுத்துக்கூற யாரும் இல்லை. இன்று அவர் இருந்திருந்தால் பெண்களை விளையாட்டுப் பொருளாய் எண்ணும் ஆண்களைத் திருத்தச் சொல்லி அவருக்கு விருப்பமான பராசக்தியிடம் வேண்டி ஒரு கவிதை எழுதி இருப்பார் போலும்.

இதைப் பற்றி இன்னும் உன்னிடம் நிறைய பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். ஆனால் நேரமின்மையின் காரணமாக முடித்துக் கொண்டு எனது அடுத்த கடிதத்தில் தொடர்கிறேன். உனது பதிலுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்.

இப்படிக்கு

உன் உயிர்த் தோழி.......

ர.ரஞ்சிதா
முதுகலைத் தமிழ்
முதலாமாண்டு.

## மேற்கோள்

1. இந்தியா மொழிகளின் காட்சி சாலை - பேரா.அகத்தியலிங்கம்

2. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு - ஔவையார்

3. நான் தனியாக வாழவில்லை, தமிழோடு வாழ்கிறேன்
   - திரு.வி.க.

4. உண்பது நாழி - உடுப்பது இரண்டே
   - மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்

5. ஒன்றே குலம்! ஒருவனே தேவன் - திருமூலர்

மு.சந்தியா
இளங்கலைத் தமிழ்
மூன்றாமாண்டு

# நூல் அறிவோம்



நூலின் பெயர் : வின்மைன்ட் (அகம் அறிவோம் ப-1)

நூலாசிரியர் : வி.ஜனகன்

வெளியீடு : பூவரசி வெளியீடு

"வின்மைன்ட் - அகம் அறிவோம் என்ற நூல் முதல் பதிப்பாக இந்த ஆண்டு (2019) பூவரசி பதிப்பகம் பதிப்பித்துள்ளது.

இந்நூல் பற்றிப் பின்வருமாறு விரிவாகக் காண்போம். இதில் தொடக்கமாக "வின்மைன்ட் வாசகங்கள்". அதனைத் தொடர்ந்து கட்டுரைகளும் தொடர்ச்சியாக அமைந்திருப்பது படிப்பவர்களுக்கு ஆர்வம் கூட்டும் வகையில் உள்ளது.

வாழ்க்கை, குணம், வெற்றி இலக்கு..... என்ற மூன்று கருத்துகளை மையமாகக் கொண்டு சுமார் நூற்று தொன்னூற்றைந்து (195) வாசகங்களும் அதன் பிறகு,

* நம்மை நாமே தேர்ந்தெடுப்போம்
* உங்களால் அதிஸ்ரத்தினை இலகுவாகக் கையாள முடியும்!
* குழந்தைகளின் அபிவிருத்தியும் தற்கால ஆரம்பப் பாடசாலைகளின் போக்கும்
* ஈகோ எப்படியெல்லாம் உங்களைக் குடையும்?
* எங்களைத் தேடுவோம்
* நீங்களே உங்களைப் பார்த்து வியக்கும் வகையில் வாழ்வது எப்படி?
* எம் இலக்கின் ஆசான்கள் குழந்தைகள்!
* படைப்பாற்றலின் எரிபொருள் சலிப்பு
* எமது பாதையை அமைக்க இன்றே பாதை அமைப்போம்

என ஒன்பது வகையான கட்டுரைகளும் ஒன்பது வகையான கருத்துகளை வெளிப்படுத்துகின்றன. இளைஞர்களை ஊக்குவிப்பது என்ற ஒற்றை இலக்கை அடிப்படையாகக் கொண்டே இந்த ஒன்பது கட்டுரைகளும் உருவாகியுள்ளன.

பணம் இல்லாதவன் ஏழை அல்ல. கனவுகளும் இலக்குகளும் இல்லாதவனே உண்மையான ஏழை; படிப்பவரின் மனதில் குறிப்பாக இளைஞர்களின் மத்தியில் ஒரு இலட்சியத்தையும், உயர்ந்த குறிக்கோளை உருவாக்குவதாகவும் இந்நூல் அமைந்துள்ளது இது நூலின் முதல் வாசகத்தை படிக்கும் போதே நமக்கு நன்கு தெளிவாகின்றது.

அந்த வாசகத்தைக் காண்போம்,

“வாழ்க்கை என்பது
நம்மை அறிந்து கொள்வதற்கானது மட்டுமல்ல
நம்மை உருவாக்குவதற்கானதும் கூட”,
“இன்னாரைப் போல வாழ வேண்டும் என்று
எண்ணுவதை விட
உன்னைப் போல வாழவேண்டும் என
பிறர் எண்ணும்படி வாழ்வதே சிறப்பு.......”

அன்பாக இருந்து பார்த்தால் வாழ்க்கை சிறப்பாக இருக்கும் என்பது இதில் வலியுறுத்தப்படுகிறது.

அவரின் கருத்துகள் வாழ்க்கை பற்றியும், வாழ்க்கையோடு ஒப்பிட்டு அதன்படி செயல்படக் கூடியதாகவும் இருக்கிறது.

நம் வாழ்வில் நேரிடும் தோல்விகளும் அவற்றிலிருந்து பெறும் வெற்றிகளைப் பற்றியும் விரிவாக விளக்கியுள்ளார்.

இளம் வயதினரை இவரின் வாசகங்கள் கவர்வதற்குக் காரணம் அவரின் அனுபவமிக்க கருத்துகளே ஒவ்வொரு வாசகங்களும் வாழ்க்கையோடு ஒப்பிட்டு அதன்படி செயல்பட தூண்டுதலாக இருக்கின்றது.

"நீ அறிவாளியாகப் பிறக்கவில்லை என்றால்
அது உன்னுடைய தவறு இல்லை.  ஆனால்
நீ அதிகமாக முயற்சிக்கவில்லை என்றால்
அதுதான் உன்னுடைய மிகப்பெரிய தவறு"

இந்நூலின் இறுதியில் ஆசிரியரின் வாழ்க்கை, சாதனைகள், விருதுகள் என அவரைப் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

மேலும் இந்நூலில் வடமொழிச் சொற்களை பயன்படுத்தக் கூடாது என்பதற்காக வடமொழி சொற்களைத் தமிழாக்கி எழுதியுள்ளார். (அதிர்ஷ்டம் - அதிஸ்ரம், விஷயம் - விடயம்) மேலும், இந்நூலில் பல சொற்கள் இலங்கை தமிழ்ச் சொற்களாக அமைந்திருப்பது வாசகரின் கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது.

முயற்சிகள் தவறலாம். ஆனால் முயற்சி செய்ய தவறக்கூடாது என்பது இந்நூலினை படிப்பவர்கள் உள்ளத்தில் தோன்றும் அசைக்க முடியாத கருத்தாகும்.

**அ.பர்ஸ்ரனா**
இளங்கலைத் தமிழ்
மூன்றாமாண்டு

மரபுக் கவிதை வெண்பா

அ.ஸ்டெல்லாமேரி
இளங்கலைத் தமிழ்
மூன்றாமாண்டு

### மழை

கருமேகம் சூழ்ந்து மழைபொழியும் காலம்
மகிழ்ச்சியால் இன்புறாதோர் உண்டோ? - மழையால்
குழந்தைகள் இன்புற்று துள்ளுவர் காரணம்
பள்ளி விடுமுறை நாள்.



### உழவன்



சேற்றிலே கால்வைத்து நெற்றி வியர்வைசிந்தி
உற்பத்தி செய்தநெல் முத்தாய்! - சுயநலமாய்
விற்பனை செய்யாமல் நட்டத்தை ஏற்றுநாளும்
போற்றிய நல்உழவன் பார்.



# பழங்கதை கேளு.........

"பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது"

பொன் என்பது குரு என்னும் வியாழன் கிரகத்தைக் குறிக்கும். ஒருவர் ஜாதகத்தில் குரு நல்ல நிலையில் இருப்பது கூட அபூர்வமானதல்ல. ஆனால் புதன் நல்ல நிலையில் இருப்பது மிகவும் அரிதான விஷயம் என்பது இப்பழமொழியின் அர்த்தம்.

ஒருவருக்குச் செல்வம் கிடைப்பது கூட அரிதல்ல. ஆனால் கல்வி அறிவு கிடைப்பது மிகவும் சிரமம் என்று புரிந்து கொள்ள வேண்டும். குரு–செல்வத்தையும்; புதன்–கல்வியையும் குறிக்கும். இந்தப் பழமொழியில் வரும் புதன் என்னும் சொல் புதன்கிழமையைக் குறிப்பதல்ல.

**ர.சங்கீதா**

இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## விடுகதை

அ.ரேஷ்மா ஷெரின்

முதலாம் ஆண்டு, வணிகவியல் 'ஆ' பிரிவு

1. ஆடாமல் பாடுவேன், நாக்கு அசையாமல் பேசுவேன்.
நான் யார்?
2. தேடாமல் கிடைக்கும் பல், தேடும் செல்வத்தைக்
குறைக்கும் பல்?
3. ஓடியாடி உழைத்தும் அவன் கிடப்பது மூலையில் தான்,
அவன் யார்?
4. அழகான வட்ட குளம், அதில் இறங்க முடியாது,
அது என்ன?
5. நாலு மூலைப் பெட்டி, நடுவே உருண்டு ஓடும் குதிரைக் குட்டி.
அது என்ன?

விடைகள் : 1. கிராமபோன் 2. சோம்பல் 3. விளக்குமாறு 4. இளநீர் 5. அம்மிக்குழவி



# மலரே.......

## வாகை

வாகை, Albiza lebbeck என்னும் மரம் தெற்காசியாவைப் பூர்வீகமாகக் கொண்டது. இம்மரம் பிற வெப்பமண்டல பகுதிகளில் பரவலாகக் காணப்படுகின்றது. இது வாகை இனத்தைச் சேர்ந்தது. வாகை மரம் வலுவான மரமாகவும், தமிழர்கள் வாழும் பகுதிகளில் காணப்படும் பழமையான மரங்களுள் ஒன்றாகவும் கருதப்படுகின்றது. சங்ககாலத்தில் போரில் வெற்றி பெறும் வீரர்களுக்கு வாகை மலர் சூட்டப்பட்டு வெற்றிக் களிப்பை பகிர்ந்ததாக தமிழ் இலக்கியங்களில் குறிப்புகள் உள்ளன.

சிறப்புகள் :-

* வாகை மலர்ச் சூடுதல் வெற்றிக் களிப்பை உணர்த்தும்.
* வீக்கம் கொப்புளம் வடிதலுக்கும் மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.
* இருமல், நுரையீரல் அழற்சி, ஈரலழற்சி ஆகியவற்றிற்கும் இம்மரப்பட்டை மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றது.
* இதன் இலை, பூ பட்டை, பிசின், வேர், விதை ஆகியவை மருத்துவ பயனுள்ளவைகள்.
* வாகை வேர் சித்த மருத்துவத்தில் கூறப்பட்டுள்ள பெரும் பஞ்ச மூலங்களுள் ஒன்று.
* தமிழீழத்தின் தேசிய மரமாகும்.

வாகைத் திணை

"வாகை தானே பாலையது புறனே"

வாகை என்பது புறத்திணை. பாலை என்னும் அகத்திணையின் புறனாகும்.

கு.மஞ்சு
முதுகலைத் தமிழ்
முதலாமாண்டு



# மாடித் தோட்டம் அமைப்பது எப்படி?

மாடித் தோட்டம் என்றவுடன் நம் நினைவில் இருப்பது மேற்கூரை (காங்கிரீட்) பாதுகாப்பாகும். மேற்கூரையைப் பாதுகாப்பதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய வழிகள் :

மாடியில் உள்ள தளத்தில் இரப்பர் (Rubber) கோட் பெயிண்ட் அடிக்க வேண்டும்.

அதிக கனம் இல்லாத ஜாடிகள், மண் தொட்டி என்றால் டெரகோட்டா மண் தொட்டி (Terracotta Pot), மாடித் தோட்டத்திற்கென்றே வடிவமைக்கப்பட்ட பிளாஸ்டிக் பைகள் (Grow bag), பிளாஸ்டிக் தொட்டிகள் அல்லது சுத்தம் செய்யப்பட்ட பெயிண்ட் வாளிகள் இவற்றில் ஏதாவது ஒன்றைத் தேர்வு செய்ய வேண்டும்.

**இடுபொருள்கள் :**

ஒரு தாவரம் நன்கு வளர வேண்டுமென்றால் வளமான மண் தேவை. ஆனால் மண் வைத்து மாடித் தோட்டம் அமைத்தால் மாடி காங்கிரீட் விரைவில் பலமிழந்து விடும். ஆகையால் மண்ணிற்கு இடுபொருள்களை இட வேண்டும்.

மாட்டுச் சாணமும், மக்கிய தேங்காய் நார் கழிவுகளும் (Cocopeat) கனமில்லாத வளமான இடுபொருள்களாகும்.

மாட்டுச் சாணம் கிடைக்கவில்லை என்றால் காய்ந்த எருவட்டியை பயன்படுத்தலாம். தேங்காய் நார் கழிவு இரண்டு பங்கும் மாட்டுச் சாணம் அல்லது எருவட்டி ஒரு பங்கும், சமையலறை கழிவு ஒரு பங்கும் இட்டுத் தொட்டியை நிரப்ப வேண்டும்.

**காய்கனிகள் தேர்வு செய்தல் :**

மாடித் தோட்டத்திற்கு நாட்டு காய்கனிகள் மிகச் சிறந்தவை.

செடிக் காய்களான வெண்டைக்காய், மிளகாய், கொத்தவரங்காய் ஆகியவற்றை சின்னப் பைகளில் நேரடியாக விதைக்கலாம்.

இவற்றில் கத்தரிக்காய், மிளகாய், தக்காளி மட்டும் விதைத்து நாற்று மூலம் நடவு செய்ய வேண்டும்.

அவரை, பூசணி, சுரைக்காய், புடலங்காய், பாகற்காய், ஆகியவற்றைப் பெரிய பை அல்லது 20 லிட்டர் வாளிகளில் நடலாம். இவற்றில் அவரை, புடலங்காய், பாகற்காய் கொடி காய்களாகும். அவற்றைப் பந்தலிட்டுப் படரவிட வேண்டும். அவரை கொடியும் உள்ளது, செடியும் உள்ளது.

**பூச்செடிகள் :**

பூச்செடிகள் என்றால் மல்லிகை, முல்லை, பிச்சி, ரோஜா, சாமந்தி, சம்பங்கி ஆகியவற்றை மொட்டைமாடித் தோட்டத்தில் பயிரிடலாம். அவற்றில் கொடி வகைகளான மல்லிகை, முல்லை, பிச்சி ஆகியவற்றை 50 லிட்டர் டிரம்களில் வளர்க்கலாம். ரோஜாவை 10 லிட்டர் வாளிகளில் வளர்க்கலாம்.

**குறிப்பு :**

ரோஜா வகைகளில் எட்வர்டு ரோஸ் (பன்னீர் ரோஸ்) ஆந்திரரெட், செவன்டே ரோஸ் ஆகியவை சிறந்தன. இவை எல்லாவகை கால நிலைக்கும் உகந்தவை.

சாமந்தியில் வெள்ளை மற்றும் மஞ்சள் சிறந்தவை. இவை குளிர்ச்சியான காலங்களில் மட்டும் பூக்கும்.

**கீரை விதைகள் :**

கொத்தமல்லி, புதினா, பாலக்கீரை, காசினிக்கீரை, தண்டுக்கீரை, சிறுகீரை, வெந்தயக் கீரை, அரைக்கீரை, வல்லாரைக் கீரை, பொன்னாங்கண்ணி கீரை ஆகியவற்றை வீட்டு மாடித் தோட்டத்தில் பயிரிடலாம்.

**விதைகள் மூலம் உற்பத்தி செய்யும் கீரைகள் :**

கொத்தமல்லி, சிறுகீரை, அரைக்கீரை, பாலக்கீரை, தண்டுக்கீரை, வெந்தயக் கீரை, மிளகு தக்காளிக் கீரை ஆகியவை ஆகும்.

**குச்சி மூலம் நடவு செய்து உற்பத்தி செய்யும் கீரைகள் :**

புதினா, பொன்னாங்கண்ணிக் கீரை

**வேர்கள் மூலம் நடவு செய்து உற்பத்தி செய்யும் கீரைகள் :**

வல்லாரைக் கீரை

**பிளாஸ்டிக் டிரம் மற்றும் வாளிகளைப் பயன்படுத்தும் முறை :**

பிளாஸ்டிக் டிரம் மற்றும் வாளிகளைப் பயன்படுத்தும் போது நன்கு சுத்தம் செய்தல் வேண்டும்.

அதிகப்படியான தண்ணீர் செடியின் அருகில் இருந்தால் செடியின் வேர்கள் அழுகிவிடும். ஆகையால் தண்ணீர் வெளியேற டிரம் மற்றும் வாளிகளின் அடிப்பகுதியில் இரண்டு அல்லது மூன்று இடங்களில் துளை இட வேண்டும். மேற்கூறிய முறையில் மாடித் தோட்டம் அமைத்துப் பயன்படுத்தலாம்.

## கவிதை...




அம்மா நீ என்னைப் பெற்றது எதற்காக?
இந்த பூமியில் அனாதையாக விட்டுச் செல்வதற்காகவா?

இந்த பூமியில் நீயின்றி என்னால் வாழ இயலுமா?
உன் வலிகளைப் பொறுத்து ஒரு மலராய் என்னைப் பெற்றெடுத்தாய்

அந்த மலரை வாடவிட்டுப் போனது சரியா?
உன்னைப் பார்க்க வேண்டும் என்று நினைத்து
நினைத்து வருந்தாத நாள் இல்லை?
உன்னைப் பார்ப்பதற்கு எத்தனை எல்லை?
அது என் மரணம் என்றாலும் பரவாயில்லை......

உன்னைப் பார்க்க வேண்டும்! உன்னைத் தொட வேண்டும்!
என்பது என் பேராசை தாயே!.......

க.சங்கீதா
வங்கியல் முகாமைத்துவம்



# தொடர் முயற்சி......

ஆ.வள்ளி
தமிழிலக்கியம் மூன்றாமாண்டு.

நீண்ட நேரமாகத் தண்ணீரைத் தேடிய படியே அலைந்து கொண்டிருந்தது ஒரு மான். அந்நேரத்தில் மானின் எதிரே ஒரு யானை வந்தது. "யானையாரே! கொஞ்சம் நில்லுங்கள்! நான் தண்ணீரைத் தேடியபடி அலைந்து கொண்டிருக்கின்றேன். நீங்கள் வந்த வழியில் ஏதாவது குளங்கள், குட்டைகள் இருக்கின்றதா?" என்று மான் கேட்டது.

"மானே! நீ இந்த வழியாகச் சிறிது தூரம் செல். ஒருவேளை குளம், குட்டை இருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது" என்று திருப்தியில்லாதவாறு சொன்னது யானை.

பின் யானை சொன்ன மாதிரி மானும் முன்னேறிச் சென்று கொண்டிருந்தது. அந்நேரம் மானின் எதிரே கரடி ஒன்று வந்தது. "கரடியே! நீ இந்தப் பாதையின் வழியாகத் தானே வருகின்றாய். இந்தப் பக்கத்தில் ஏதாவது நீர் நிலை இருக்கிறதா?" என்று கேட்டது மான். உடனே கரடி, "மானே இதுவரையிலும் என் கண்களுக்கு எந்த நீர் நிலையும் தென்படவில்லை. நீ வேண்டுமானால் முயற்சி செய்து பார்" என்று கூறியது கரடி. அதனைக் கேட்டுக் கொண்டே மானும் அமைதியுடன் அந்த இடத்தை விட்டுச் சென்றது.

தண்ணீரைத் தேடியபடியே தனது வலப்புறமும், இடப்புறமும் திரும்பிப் பார்த்துக் கொண்டே வந்தது மான்.

அப்போது மானின் எதிரே மயில் ஒன்று அசைந்து அசைந்து வந்து கொண்டிருந்தது.

"மயிலே! உன் கண்களில் ஏதாவது நீர் நிலைகள் தென்பட்டதா?" என்று கேட்டது மான். "இல்லை, இல்லை. ஆனால் வழியில் ஏராளமான மரங்களும், பச்சைப் புல்வெளிகளும் காணப்படுகின்றன. ஒருவேளை இன்னும் நீ அந்தப் பக்கமாக நடந்து சென்றால் ஏதாவது நீர் நிலைகள் தோன்றிடலாம் என்று எனக்குத் தோன்றுகிறது" என்றது மயில். அதனைக் கேட்ட மான் தலையை ஆட்டிக் கொண்டே சென்றது. எல்லோருமே இருக்கலாம் என்றுதான் சொல்கின்றார்கள். இருக்கிறது என்று சொல்ல மாட்டார்களா? என்று சொல்லியபடி நடப்பது நடக்கட்டும் என்ற எண்ணத்தோடு அந்தப் புல்வெளிகளையும், மரங்களையும் கடந்து சென்றது மான்.

பின் சிறிது நேரத்தில் அந்த மான் ஒரு முயலைச் சந்தித்தது. இந்த முயலாவது தண்ணீர் இருக்கும் இடம் எங்கே எனச் சொல்லாதா பார்க்கலாம் என்ற எண்ணத்துடன் முயலை அழைத்தது. பின் "முயலே வா! என் அருகே வா! உன் கண்களுக்குத் தண்ணீர் நிரம்பிய, குளம், குட்டைகள் ஏதாவது தென்பட்டதா?" என்று கேட்டது மான்.

"மானே! அப்படி எதுவும் என் கண்களுக்குத் தென்படவில்லை." இதனைக் கேட்கின்றபோது மானுக்குச் சற்று வெறுப்பாகத்தானிருந்தது.

அது சோர்வுடன் தனது பயணத்தைத் தொடர்ந்தது. அங்கிருந்து சிறிது தூரம் நடந்து வந்த மான், அந்தப் பக்கத்தில் ஒரு கல் மண்டபம் அருகே வந்து நின்றது. இந்த இடத்தில் நீர்நிலை எதுவும் தென்படவில்லை. பின் சிறிது நேரமாக அந்த இடத்தில் நின்றபடி யோசனை செய்த மான், இனிமேல் நாம் தண்ணீரைத் தேடி அலைவதில் பயனில்லை. எதற்காக நேரத்தையெல்லாம் வீணாக்க வேண்டும். நான் வந்த வழியே சென்று விடுவதுதான் நல்லது. நாமும் நெடுந்தூரம் நடந்து வந்து விட்டோம். இனிமேல் நமது இருப்பிடத்திற்கே சென்று ஓய்வு எடுத்துக் கொள்வோம் என்ற முடிவோடு சென்றது மான். மெல்ல மெல்ல நடந்தபடியே அங்கிருந்து புறப்பட்ட அந்த மான் தனது இருப்பிடத்தின் அருகே சென்றது. அப்போது அந்த இடத்தில் கருங்குருவி ஒன்று பறந்து வந்தது. மானின் நீண்ட நாள்

நண்பனான அந்தக் கருங்குருவி “மானே! உன்னைப் பார்த்து ஓர் நல்ல செய்தியைச் சொல்லிடலாம்” என்று வந்தேன் என்றது.

உடனே மான், “கருங்குயிலே! நீ என்னிடம் ஆர்வத்துடன் சொல்ல வந்த செய்தி என்ன?” என்று கேட்டது.

“மானே! நான் ஒரு பெரிய ஏரியைக் கண்டேன். அந்த ஏரியில் தண்ணீர் ஏராளமாக நிரம்பியிருக்கின்றது. பின் அந்த ஏரியில் எப்போதும் தண்ணீர் வற்றாது என நினைக்கிறேன். நீ என்னோடு வந்தால் அந்த ஏரியை உனக்குக் காட்டுவேன்” என்றது கருங்குருவி. “சரி நண்பா! இதனைக் கேட்கின்றபோது எனக்கு மகிழ்ச்சியாகத் தான் இருக்கிறது. நானும் நீண்ட நேரமாக தண்ணீரைத்தான் தேடி அலைந்து களைப்போடு வந்தேன். நீ கண்ட ஏரி எந்த இடத்தில் இருக்கிறது?” என்று ஆர்வத்துடன் கேட்டது மான். நண்பா! நீ நடந்து வந்து கொண்டிருக்கும் திசையின் எதிரேயே சிறிது தூரம் சென்றால் மரங்களும், புல்வெளிகளும் இருக்கும். அதையும் கடந்து சென்றால் ஒரு கல் மண்டபத்தில் இருந்து சிறிது தூரத்தில் அந்த ஏரியிருக்கிறது.” இதனைக் கேட்ட மான் திடுக்கிட்டது. “என்ன என்ன சொன்னாய்? அந்தக் கல்மண்டபத்திற்கு அடுத்ததாகதான் ஏரி இருக்கின்றதா. அந்தக் கல் மண்டபம் வரையிலும் சென்ற நான் தண்ணீர் கிடைக்காது என்ற எண்ணத்தோடு உடனேயே திரும்பி விட்டேன். இன்னும் கொஞ்சம் முயற்சி செய்திருந்தால் அந்த ஏரியை அடைந்திருப்பேன். என்னுடைய அரைகுறையான முயற்சியினால் பயன் கிடைக்காமல் போய் விட்டதே என்றது”

“நண்பா! வருத்தப்படாதே! மனதைத் தளரவிடாமல் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருந்தால்தான் நாம் நினைத்ததை அடைந்திட முடியும். இன்னொரு முறை நாம் இருவரும் அந்த ஏரிக்குச் செல்லலாம் என்ற கருங்குருவி, கவலை என்பதை விட்டுவிடு. ஆனால் இப்போது நடந்ததை உன்னுடைய வாழ்க்கையில் ஓர் பாடமாக எடுத்துக் கொண்டு செல் என்றது. ஆமாம் நண்பா நீ சொல்வது உண்மைதான். தொடர் முயற்சியினால் தான் நினைத்ததை அடைய முடியும் என்பதை நான் புரிந்து கொண்டேன் என்று கூறியது மான்...

# நேரமில்லை.......

ஞா.அன்னக்கிளி
முதுகலை ஆங்கிலம்
இரண்டாமாண்டு



நான் கருவில் நகர
நீயோ காரில் நகர
உன் குரலோசை நான் கேட்பதெங்கே?

நான் தொட்டிலில் கிடக்க
நீயோ உன் அலுவலில் கிடக்க
நான் தேடும் உன் அருகாமையெங்கே?

நான் நடை பயில
நீயோ நிற்க நேரமில்லாமல் ஓட
உன் கரங்களின் துணை காணாமல் போனதெங்கே?

உன் அன்பு பரிசாய் அலைபேசி இருக்க
நானோ உன் அன்பின் ஆளுமைக்கு கனா காண
எனது ஏக்கங்கள் மாறிப் போவதெங்கே?

என் துளிர் மீசைகள் முதன் முதலாய் முளைக்க
அதை பெருமை பேசிக் கொள்ள
நீ இல்லாமல் போனது எங்கே?

காலமெல்லாம் ஓடி விட்டாய்,
இன்று காலெழாமல் வீழ்ந்து விட்டாய்,
நான் சோம்பேறியென எதிர்காலத்திற்கு சேர்த்து வைத்தாய்,
தியாகி என்னும் பட்டம் சூட்டிக் கொண்டாய்.

இப்போது தழுவுகின்றாயே என் தோளை,
இன்னொரு முறை நடை பயில, துணைக்கு ஒரு கோலை!
புரிகின்ற போது உன் அருகில் நானில்லை
நானும் ஓடுகிறேன், காண நேரமில்லை...!

என் பிள்ளையின் எதிர்காலம் தேடுகிறேன்,
என் நிகழ்காலம் தொலைத்து ஓடுகிறேன்.
உன் போல் நானுமிங்கே தியாகியப்பா......!



# ஒப்பனைக் கலையின் மகத்துவம்



ஹே.அர்ச்சனா, இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாமாண்டு.

ஒப்பனைக்கலை அனைவரையும் ஆச்சரியப்பட வைக்கும் கலை
அளவில்லா ஆர்வத்தைத் தூண்டும் கலை
உணர்ச்சிப் பொங்கும் கலை
உவகை பெருகிடும் கலை

இக்கலை மங்கையர்க்கே உரிய மகத்துவமானக் கலை
சிந்தித்து சிந்தித்து சிகை அலங்காரம் செய்யும் பொழுது
சிறிது கலைந்தாலும் சினம் கொள்ளும் பெண்களிடம்
ஒப்பனைக் கலையின் மகத்துவம் வெளிப்படுகிறது.

எப்பொழுதும் முகம் பொலிவுடன் இருக்க
முந்நூறு முறை முயற்சித்த பிறகு
ஒரு பரு ஏற்பட்டாலும் வருத்தம் கொள்ளும் பெண்களிடம்
ஒப்பனைக் கலையின் மகத்துவம் வெளிப்படுகிறது.

மீன் போன்ற கண்களுக்குக் கருமையான மையிட்டு
எதிரில் வரும் பிறர் மனதை உருக வைக்கும் பெண்களிடம்
ஒப்பனைக் கலையின் மகத்துவம் வெளிப்படுகிறது.

பிறை போன்ற நெற்றியில் கோபுரமாய் பொட்டிட்டு
பௌவியமாய் புன்னகைக்கும் கன்னிப் பெண்களிடம்
ஒப்பனைக் கலையின் மகத்துவம் வெளிப்படுகிறது.

பல்வேறு இடையூறுகள் இவ்வுலகில் ஏற்பட்டால்
இடைவிடாத இன்பம் காட்டும் இளமையான பெண்களிடம்
ஒப்பனைக் கலையின் மகத்துவம் வெளிப்படுகிறது.

பண்டையத் தமிழரின் வாழ்வியல் கலாச்சாரத்தை
பாங்குறப் பண்படுத்தும் பணிவான பெண்களிடம்
ஒப்பனைக் கலையின் மகத்துவம் வெளிப்படுகிறது.

ஆயக் கலைகள் அறுபத்தி நான்கு என்றாலும்
மகளிர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஒரே கலை
ஒப்பனைக் கலையே.




# பெண்கள்

காற்றின் மெல்லிய இதம் நாங்கள்
மழையில் தோன்றும் மண்வாசம் நாங்கள்
தேன்அடையின் இனிய சுவை நாங்கள்
நீர்வீழ்ச்சியின் அலை ஓசை நாங்கள்

புல்லாங்குழலின் அமுத் இசை நாங்கள்
பழரசத்தின் பல்சுவை நாங்கள்
கைத்தறியில் நெய்தஅழகிய பட்டு நாங்கள்
நவரத்தினங்களால் கோர்த்த மணிமாலை நாங்கள்

அகன்ற கடலின் எல்லை நாங்கள்
சங்கடங்களைத் தீர்க்கும் மருந்து நாங்கள்
சமுதாயத்தில் சிறந்த போராளி நாங்கள்
உலக வரலாற்றின் வேர்கள் நாங்கள்
தமிழன்னைக்கும் தமிழ்நாட்டிற்கும் பிறந்த
நங்கைகள் நாங்கள்
உலகத்திற்கே உரக்கச் சொல்வோம்
வீரப் பெண்பிள்ளைகள் நாங்கள்.

- பெ.ஸ்ரீஜோதிகா
வணிகவியல்,
முதலாமாண்டு
'இ' பிரிவு.



# நினைத்தது நடக்குமா?

விலங்குகளை.....
வேட்டைக்காரனிடம் இருந்தும்

மரணிப்பவர்களை......
எமனிடம் இருந்தும்

சின்னஞ் சிறு சிறுமிகளை.....,
ஆண்களிடம் இருந்தும்

மரங்களை...,
மதிக்காதவர்களிடம் இருந்தும்

நீரை....,
வீணாக்குகிறவர்களிடம் இருந்தும்

விவசாயியை....,
தற்கொலையில் இருந்தும்

விவசாயத்தை...,
மனிதர்களிடம் இருந்தும்

காப்பாற்ற நினைத்தது - வெறும்
கனவில் முடிந்துவிடுமா - அல்லது
நான் நினைத்தது நடக்குமா?



ஜோ.பூமிகா
வணிகவியல்
முதலாம் ஆண்டு.

## தமிழ் எண்களைக் கொண்டு நம் பிறந்த தேதி மற்றும் மாதத்தை அறிவோம்!

**முறைகள் :**

* எண் ௭ ஆல் தொடங்கவும்.
* பிறந்த மாதத்தால் பெருக்கவும்.
* எண் ௧ ஆல் கழிக்கவும்.
* எண் ௧௩ ஆல் பெருக்கவும்.
* பிறந்த நாளை கூட்டவும்.
* எண் ௩ ஆல் கூட்டவும்.
* எண் ௧௧ ஆல் பெருக்கவும்.
* பிறந்த மாதத்தால் கழிக்கவும்.
* பிறந்த தேதியால் கழிக்கவும்.
* எண் ௧௦ ஆல் வகுக்கவும்.
* எண் ௧௧ ஆல் கூட்டவும்.

| | |
|---|---|
| ௧ | 1 |
| ௨ | 2 |
| ௩ | 3 |
| ௪ | 4 |
| ௫ | 5 |
| ௬ | 6 |
| ௭ | 7 |
| ௮ | 8 |
| ௯ | 9 |
| ௧௦ | 10 |

**எடுத்துக்காட்டு**

என் பிறந்தநாள் - 12-09-2001

* ௭
* ௭ X ௯ = ௬௩
* ௬௩ - ௧ = ௬௨
* ௬௨ X ௧௩ = ௮௦௬
* ௮௦௬ + ௧௨ = ௮௧௮
* ௮௧௮ + ௩ = ௮௨௧
* ௮௨௧ X ௧௧ = ௯௦௩௧
* ௯௦௩௧ - ௯ = ௯௦௨௨
* ௯௦௨௨ - ௧௨ = ௯௦௧௦
* ௯௦௧௦ / ௧௦ = ௯௦௧
* ௯௦௧ + ௧௧ = ௯௧௨
* ௯௧௨ / ௧௦௦ = ௯௧௨

**09.12 எனது பிறந்தநாள்**

# தமிழ்

திருப்பாற்கடலைக் கடைந்து அமுதெடுத்தது போல்
தமிழ்ப்பாலைக் கடைந்து முப்பால் திரட்டிய என் ஐயன்
- வள்ளுவனும் உண்டு!,

கட்டுத்தறியையும் கவிபாட வைத்த என் கம்பரும் உண்டு!!
தமிழ்ப்பித்தாய் கவிபடைத்த என் பாரதியும் உண்டு!!

குடும்ப விளக்கேற்றிய என் பாரதிதாசனும் உண்டு!!
உவமைக்கவிதை எழுதிய என் சுரதாவும் உண்டு!!

தமிழ் வசனத்தோடு விளையாடிய என் கலைஞரும் உண்டு!!
அள்ளி குடித்தால் பத்தாதென்று தமிழ் அமுதை வாரிகுளித்த
- வாலியும் உண்டு!!

பாமரனுக்கும் புரியும் புதுக்கவிதை தந்த
வைரமுத்தும் உண்டு!!
இன்னும், தமிழை உழுது கொண்டிருக்கும் பல கவிஞர்களும்
- உண்டு!!

அதில் நாங்கள் விழுந்து விட்டோம் விதையாய்!
உரமிடுங்கள் எங்களுக்கு, விருட்சமாய் வளர்வதற்கு!!

**பி.லோகஸ்ரீ**
வணிகவியல் I ஆம் ஆண்டு 'B'



# வாழ்க்கை

தண்ணீருக்காக ஏங்கினேன்.......
தாகமாயிருந்ததால்!

உணவிற்காக ஏங்கினேன்......
பசியாய் இருந்ததால்!

உதவிக்காக ஏங்கினேன்.........
எதுவும் இல்லாததால்!

பாசத்திற்காக ஏங்கினேன்........
எங்கும் அது கிடைக்காததால்!

கற்றுக்கொண்டேன்......
என் வாழ்க்கையில்.........

தாகமாயிருப்போருக்கு.......
தண்ணீர் கொடுக்க!

பசித்தோருக்கு உணவளிக்க!
எதுவும் இல்லாதோரை........
ஆதரிக்க!

பாசத்திற்காக ஏங்குபவரை
அரவணைக்க!

எதுவெல்லாம்
எனக்கு வேண்டுமென ஏங்கினேனோ.......

அவற்றையெல்லாம்
பிறருக்குக் கொடுப்பேன்!

சா.ஈஸ்வரி
முதுகலை வணிகவியல்
முதலாமாண்டு



# நீ நீயாக இரு.......

நெஞ்சமெல்லாம் பல நஞ்சு கொண்டு
சூழல் மிஞ்சி கொண்டு தாண்டி போனாலும்

பஞ்சமொன்று உன்னை விஞ்சிக் கொண்டு
உன்னில் தஞ்சம் என்று சொல்லி வந்தாலும்

உன் நெஞ்சம் எல்லாம் பல காயம் கொண்டு
வாழ்வில் பல பஞ்சம் உன்னில் வந்து சேர்ந்தாலும்

பல வஞ்சம் கொண்ட மனத்திடையே
நீ பிஞ்சு மனம் கொண்டு நின்றாலும்

உன் நெஞ்சுக்குள்ளே வந்த காயத்திலே
நீ திக்கித் திணறி தான் போகையிலும்

பல சொந்தங்களும் பல பந்தங்களும்
உன்னால் முடியாது முடியாது என்ற வேளையிலும்

உன் சிறகொடித்து உன்னை சிறையடைத்த
உன் கண்ணீர் தான் வற்றிடும் வேளையிலும்

உள்ளம் திணறாதே என்றும் திகையாதே
உன் இலக்கு தான் வெற்றிபெறும் வரையிலே......

என்றென்றும் உன்னை நீ மாற்றிடாதே.......
நீ நீயாகவே இரு..........

**அ.உமா மகேஸ்வரி**
இளங்கலைத் தமிழிலக்கியம்
இரண்டாமாண்டு

# சொல் விளையாட்டு

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ணா | க | த | ரு | கா | பொ | து | ற | க் | வு | ட | றி |
| ப | கி | ப் | ந | ஷ் | த | லை | னு | ப | மூ | ம | ற் |
| மை | கௌ | ரு | ம் | தி | ல் | ல் | த | வ | ல் | வெ | ை |
| ம் | ங | சி | த் | வி | மா | ர | அ | ஷ் | த் | ச | று |
| பொ | த் | ரி | க | ல | ய | தோ | ரி | லை | ன | ர | லா |
| று | கி | க் | க | ந் | தோ | ப | ள | ழ | ங | வ | ச |
| ம | ரி | மா | ச | ஷ் | ச | ரு | ம | ை | ம் | மி | மா |
| சி | மா | சு | வீ | ணை | ப | வா | னி | நு | த | ழ் | தி |

1) ஜெயகாந்தன் எழுதிய சிறுகதை எது?

2) புதுமைப்பித்தன் எழுதிய சிறுகதை எது?

3) கல்கி எழுதிய சிறுகதை எது?


4) கு.அழகிரிசாமி எழுதிய சிறுகதை எது?

5) மௌனி எழுதிய சிறுகதை எது?

பொ. விஷ்ணுபிரியா
I B.Sc. Maths



வி.பூஜா
இளங்கலை கணிதம்
மூன்றாமாண்டு






சி.யாமினி
இளங்கலை ஆங்கிலம்
முதலாமாண்டு

ஸ்ரீ மோனிகா
முதுகலை ஆங்கிலம்
இரண்டாமாண்டு






பி.சுவாதி
இளங்கலை கணிதம் முதலாமாண்டு




அ.அனிதா
இளங்கலை வணிகவியல் முதலாமாண்டு

# கல்லூரி நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| தமிழ்த்துறை | 14.08.2019 | சிறப்புச் சொற்பொழிவு<br>நவீன உலகில் தமிழும் தமிழரும் |
| | 16.08.2019 | சிறப்புச் சொற்பொழிவு<br>புலம்பெயர் வாழ்வும் தமிழரும் |
| நிர்வாகவியல் துறை | 16.08.2019 | பயிலரங்கம் (Stress Buster) |
| உயிர்வேதியியல் துறை | 16.08.2019 | பயிலரங்கம் (Fold Scope) |
| ஆங்கிலத்துறை | 17.08.2019 | தேசிய விரிவுரையாளர் தேர்வு<br>பயிற்சி வகுப்பு - தொடக்க விழா |
| தமிழ்த்துறை | 19.08.2019 | பன்னாட்டுக் கருத்தரங்கம்<br>(நவீன படைப்பிலக்கியங்களின்<br>போக்குகள்) |
| கணினியியல் துறை<br>சுழற்சி II | 20.08.2019 | சிறப்புச் சொற்பொழிவு<br>Artificial Intelligent |
| தமிழ்த்துறை | 26.08.2019 | விதை - மாணவர்களின்<br>தனித்திறனுக்கான அரங்கம் |
| கணிதவியல் துறை | 31.08.2019 | கல்லூரிகளுக்கான போட்டிகள் |
| தமிழ்த்துறை | 03.09.2019 | சிறப்புச் சொற்பொழிவு<br>சிங்கையில் தமிழ்ச்சூழல் |





வி.பூஜா

இளங்கலை கணிதம்
மூன்றாமாண்டு